*செய்தி வெளியீடு எண் :32* *நாள் :15.08.2019*

**தேனி மாவட்டம்,**
**போடிநாயக்கனூர் ஊராட்சி ஒன்றியம், கோடாங்கிபட்டி ஊராட்சியில்**
**73-வது இந்திய சுதந்திர தினவிழாவை முன்னிட்டு**
**நடைபெற்ற கிராமசபைக் கூட்டத்தில்**
**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள்**
**பார்வையாளராக கலந்து கொண்டார்.**

******

தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கோடாங்கிபட்டி ஊராட்சியில் இன்று (15.08.2019) 73-வது இந்திய சுதந்திர தினவிழாவை முன்னிட்டு, ஊராட்சி செயலர் தலைமையில் நடைபெற்ற கிராமசபைக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப. அவர்கள் பார்வையாளராக கலந்து கொண்டார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கிராமசபைக் கூட்டத்தில் பேசும் போது தெரிவித்ததாவது,

தேனி மாவட்டத்திலுள்ள 130 கிராம ஊராட்சிகளிலும் 73-வது இந்திய சுதந்திர தினவிழாவை முன்னிட்டு இன்று கிராமசபைக் கூட்டம் நடைபெறுகிறது. கிராமசபைக் கூட்டத்தின் நோக்கம் மக்களுக்கும், நிர்வாகத்திற்கும் இடையே உள்ள தொடர்பினை பூர்த்தி செய்வதற்கும், ஒரு கிராமத்திற்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளை கண்டறிந்து பொதுமக்களின் முன்னிலையில் விவாதித்து மக்களின் முழு ஆதரவோடு ஒரு மனதாக தீர்மானம் நிறைவேற்றி திட்டங்களை செயல்படுத்திட வேண்டும்.

மாவட்டத்தில் உள்ள 130 கிராம ஊராட்சிகளில் நடைபெறும் கிராம சபைக்கூட்டத்தில் பொது விநியோகத் திட்டத்தின் செயல்பாட்டிலும், நியாயவிலைக் கடைகளின் செயல்பாட்டிலும் வெளிப்படையான முறையை கொண்டு வரும் வகையில் நியாய விலைக்கடைகளின் கணக்குகளை சம்பந்தப்பட்ட நியாய விலைக்கடை விற்பனையாளர் மூலம் ஆஜர்படுத்தி சமூக தணிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

நியாய விலைக்கடைகளின் பதிவேடுகளில் உள்ள பதிவுகளை சரிபார்த்துக் கொள்ளவும், இதரகோரிக்கைகள் குறித்து தெரிவிக்கப்படவும், கருத்துக்களை பதிவு செய்திடவும், கிராம நிர்வாக அலுவலர் மற்றும் அலுவலக பணியாளர்கள் மேற்பார்வையாளர்களாக நியமிக்கப்பட்டு, நியாய விலைக்கடைகளின் செயல்பாடுகள் குறித்து பொதுமக்களுக்கு ஏற்படும் சந்தேகங்களை தெளிவுபடுத்திட விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. சமூகத் தணிக்கை நடத்தப்படும் பகுதியில் முன்னுரிமை குடும்ப அட்டைதாரர்களை கண்டறிந்து பயனாளிகளின் பட்டியலை கூட்டத்தில் சமர்ப்பித்து உரிய ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

பொதுமக்கள் திறந்த வெளியில் மலம் கழிக்காமல், தனி நபர் கழிப்பறை அல்லது பொது கழிப்பறையினை பயன்படுத்திட வேண்டும். சுகாதாரமான தமிழகத்தினை உருவாக்கிட வேண்டும் என்பதற்காக தமிழக அரசு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் மூலம் ஒரு கிராமத்திற்கு தேவையான தனிநபர் கழிப்பிட வசதி, பொது ஆண், பெண் இருபாலருக்கும் தனித்தனியாக பொதுக்கழிப்பிட வசதிகள் செய்து வருகிறது. பொதுமக்கள் தங்களின் குடியிருப்புகளில் கழிப்பறைக்கு தேவையான இட வசதி இருந்தால் தனிநபர் கழிப்பறை உருவாக்கிட ரூ.12,000/- அரசு மானியம் வழங்கி வருகிறது.

தமிழக அரசு தமிழகத்தில் வறட்சியை எதிர்கொள்ளவும், நீர்வள ஆதாரங்களை மேலாண்மை செய்திடவும் விவசாயிகளின் பங்களிப்புடன் நீர் நிலைகளை புனரமைக்கும் பண்டைய குடிமராமத்து திட்டத்தினை செயல்படுத்திட உத்தரவிட்டுள்ளது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் உள்ள குளங்கள் மற்றும் கண்மாய்களில் குடிமராமத்து திட்டத்தின் கீழ் வரத்து வாய்க்கால் மற்றும் கால்வாய்கள், ஏரிகள், மதகுகள் மற்றும் பிற நீர்நிலைகள் ஆகியவற்றை புனரமைத்தல், பலப்படுத்துதல் மற்றும் கலிங்குகள், மதகுகளை மறுகட்டுமானம் செய்தல், நீர்வழிகளில் அடைத்திருக்கும் செடிகளை அகற்றுதல் போன்ற பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் பைகளால் சுற்றுச்சூழல் பாதிப்படைவதோடு, மண் வளம், நீர்வளம் பாதிப்படைகின்றது. எதிர்கால சந்ததியினரின் நலனை கருத்தில் கொண்டு சுத்தமான சுகாதரமான தமிழகத்தை உருவாக்கிட பிளாஸ்டிக் பயன்பாட்டினை முற்றிலும் தவிர்த்து, பொதுமக்கள் தங்களது சுற்றுப்புறச் சூழல்களான நீர், நிலம், காற்று இவற்றை மாசில்லாமல் வைத்திட வேண்டும். படித்த வேலைவாய்ப்பற்ற பெண்கள் மற்றும் இளைஞர்கள் சுய தொழில் தொடங்கிட கைபேசி, தையல், கணினி, அழகு கலை போன்ற பல்வேறு பயிற்சிகள் அரசின் சார்பில் வழங்கப்பட்டு மானியத்துடன் கூடிய கடனுதவியும் தமிழக அரசால் வழங்கப்பட்டு வருகிறது. இதுபோன்ற தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களுக்கு பொதுமக்கள் தங்கள் ஒத்துழைபை நல்கிட வேண்டும் என தெரிவித்தார்.

கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் 250 மரக்கன்றுகளை பொதுமக்கள் மற்றும் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு வழங்கினார்.

பின்னர், வீரபாண்டி அருள்மிகு கௌமாரியம்மன் திருக்கோவிலில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அம்மனுக்கு சாத்தப்பட்ட நூல் புடவைகளை ஏழை, எளிய மக்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார். அதனைத்தொடர்ந்து, கோவில் நிர்வாகத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த (சமபந்தி) பொது விருந்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டார்.

இந்த நிகழ்ச்சிகளில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் வீ.பாஸ்கரன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் பெ.திலகவதி, செயற்பொறியாளர் எம்.கவிதா, பெரியகுளம் வருவாய் கோட்டாட்சியர் சி.ஜெயப்ரிதா, வேளாண்மைத்துறை இணை இயக்குநர் எஸ்.ஜவஹரிபாய், மகளிர் திட்ட அலுவலர் எம்.சிவக்குமார், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) முருகன், மாவட்ட பிற்படுத்தபட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் எம்.முருகசெல்வி, மாவட்ட வழங்கல் அலுவலர் இ.கார்த்திகாயினி, மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் மு,சாந்தி, துணை ஆட்சியர் (பயிற்சி) ஆர்.நிறைமதி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சுரேஷ், சாந்தி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.டி.கணேசன், வீரபாண்டி பேரூராட்சி செயல் அலுவலர் ஆர்.குணாளன், அருள்மிகு கௌமாரியம்மன் திருக்கோவில் செயல் அலுவலர் வீ.சுரேஷ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**